# திவ்வியப் பிரபந்தத்தில் இலக்கியக் கொள்கைகள்

**ர. மங்கையர்க்கரசி**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
மாநிலக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை

**மலர்:** 3
**இதழ்:** 4
**மாதம்:** ஏப்ரல்
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

இலக்கியம் என்பது மாந்தர்களின் வாழ்வினைச் செம்மையாகவும் சிறப்பாகவும் அமைவதற்கு எடுத்து இயம்பும் வகையில் இயற்றப்படுவதே ஆகும். மனிதன் குற்றமுடைய வழியில் இருந்து நீங்கி அறவழியில் நாடவேண்டும் என்பதை முதன்மையாகக் கொண்டு எடுத்துக் கூறுவதே இலக்கியம். இது மாந்தர்களின் வாழ்வினை பிரதிபலிக்கும் கண்ணாடியாகவும் விளங்குகிறது. அந்த வகையில் இறைவனின் மீது நாட்டம் கொண்டு பொய்யான வாழ்வை நீக்கி மெய்யான இறைவனின் அருளைப் பெறுவதற்காக பாடப்பட்ட இலக்கியமே “பக்தி இலக்கியம்” ஆகும். இவை சைவம், வைணவம் என்று இருவகைப் பிரிவுகளாக அமைந்துள்ளன. எனவே, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் மூலம் அறிய இயலும் இலக்கியக் கொள்கைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

ஆழ்வார்கள் அருளிச் செய்த பாசுரமே திவ்வியப் பிரபந்தம் என்று அழைக்கப்படுகின்றன. இதுவே திராவிட வேதம் என்றும் மற்றொரு பெயரும் கொண்டு விளங்குகிறது.

இறைவனின் பெருமையையும் சிறப்பையும் நயமுற அழகாக செவிக்குத் தேன் வந்து பாய்வது போல இனிமையாகப் பாடுவதால் திவ்வியப் பிரபந்தம் என்று சிறப்புப் பெறுகின்றது. “இறைவனின் பெருமையை நயமுற அழகாக செவிக்கு இனிமையாகப் பாடுவதால் திவ்வியப் பிரபந்தம் என்று அழைக்கப்படுகின்றன. திராவிட வேதம் என்றொரு பெயரும் உண்டு”[1] என்று த. வசந்தாள் என்பவர் கூறியுள்ளார். மேலும், “திவ்வியம் என்னும் வடசொல், நாறாகக் கட்டப்பட்டது என்னும் பொருளில் நூலைக் குறிப்பதாகும். அதனோடு ‘திவ்வியம்’ என்னும் அடை சேர்த்து ‘திவ்வியப் பிரபந்தம்’ ஆயிற்று. ‘திவ்வியம்’ என்னும் அடை சேர்த்து ‘திவ்வியப் பிரபந்தம்’ ஆயிற்று. ‘திவ்வியம்’ என்னும் சொல் தெய்வீகமான பொருளைக் குறிக்கப் பயன்பட்டுள்ளது. வைணவ நெறியில் இறைவன் எழுந்தருளியுள்ள தலங்கள் ‘திவ்விய தேசம்’ எனப் பெயர் பெறுகின்றன. இறைவனால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற தெய்வப் புலவர்களான ஆய்வாளர்கள் ‘திவ்விய சூரிகள்’ எனச் சிறப்பிக்கப்படுகின்றனர்”[2] என்று ம.பெ. சீனிவாசன் என்பவர் அவருடைய நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இனிமையான நாலாயிரப் பாடல்களை முத்தாக அருளிய ஆழ்வார்கள், திருமாலின் புகழைக் குறித்துப் பாடப்பட்டவையாகும். திவ்வியம் என்றால் இறைவனைப் பற்றிய சிறப்பை எடுத்துக் கூறுவதாகும். அடியவர்களுக்கு இனிமையையும் இன்பத்தையும் அளிப்பன பொருளின் தன்மையைக் கருதி இனிமை என்னும் பொருளைத் தருவதாக கொண்டது என்று கருதுவதற்கு இடமுண்டு. பிரபந்தம் என்பது வடமொழிச் சொல்லாக்கம் கொண்டவை. இதற்கு நன்கு கட்டப்பட்டது என்று தமிழில் பொருள் உண்டு என்றும் கூறுவர். மேலும், இவற்றை தெய்வீக நூல்களின் தொகுப்பு என்றும் தெய்வீக நூல் என்றும் பொருள் கொள்வதற்கு ஏதுவாக அமைகிறது என்றும் பொருள் கொள்ளலாம்.

### சிற்றிலக்கியம்

சிற்றிலக்கியங்களின் வகையை தொண்ணூற்றாறு என்று கூறுவர். ஆனால், இன்றைய இலக்கியத்தில் நானூற்றி பதினேழுக்கும் மேற்பட்ட சிற்றிலக்கிய வகைப் பிரபந்தங்கள் உள்ளன என்றும் கூறுவர். ஆகவே, பிரபந்தம் என்னும் சொல் நன்கு கட்டப்பட்டது. தொகுப்பு நூல், தனி நூல் ஆகியவை எல்லாம் கொண்டு அமைவதே சிற்றிலக்கியம் என்னும் இலக்கியத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டதைத் தமிழ் இலக்கிய வரலாறு காட்டுகிறது. பன்னிரெண்டு ஆழ்வார்களால் பாடப்பட்ட பாடல்கள் ஒவ்வொன்றும் பல இலக்கிய வகையைச் சார்ந்து காணப்படுவதால் இவற்றைச் சிற்றிலக்கியம் என்று கூறுவர். இந்த நாலாயிரப் பாசுரத்தில் உலா, பிள்ளைத் தமிழ் தமிழ், தூது, குறம், பாதாதிகேசம், தாலாட்டு, ஊடல், பூசல், கனவுப்பாட்டு, தசாவதாரப் பாட்டு, மடல், பழமொழி, புலம்பல், போர்ப்பாட்டு, சாழல் ஆகியவற்றைக் கொண்டு அமைந்துள்ளதால் திவ்வியப் பிரபந்தம் என்று பெயர் வந்திருக்கலாம். இவையெல்லாம் செவிக்கு இன்பம் எய்தும் வகையில் காணப்படுகின்றன.

### இலக்கியக் கொள்கை

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் பொருள், வடிவம், கற்பனை, உணர்ச்சி ஆகியவற்றைக் கொண்டு கூறப்படுவதே இலக்கியக் கொள்கையாகும். இந்த நான்கு வகைகளும் உள்ளதை உள்ளவாறு அப்படியே கூறினால் இலக்கியம் சிறப்பாக அமையாது. அவற்றுள், கற்பனை என்னும் நயத்தை மெருகேற்றிப் புனைந்து கூறினால்தான் அவ்விலக்கியம் சிறப்பாக அமையும் என்பது சங்க இலக்கியம் முதல் இன்றுகாறும் மேற்கொள்ளப்பட்டு வரும் இலக்கியக் கொள்கையாகும்.

### கற்பனை

'கற்பனை' என்பது புலன்கள் நேரடியாக ஒரு பொருளை கண்டு அனுபவியாத காலத்தும் அப்பொருளைக் குறித்து நினைவிற்குக் கொண்டு வரும் ஒருவகைச் சக்தியே ஆகும் என்பர். எனவே, அந்நினைவுச் சக்தியில் இருந்து இரண்டு வகையில் கற்பனையானது வேறுபடுகிறது. ஒன்று அனுபவித்த பொருளை அப்படியே மீண்டும் மனத்தில் கொண்டு வருவது. மற்றொன்று மனத்தில் கொணரும் அப்பொருள் இடத்து மறுபடியும் அனுபவத்தை ஏற்றும் தன்மை நினைவிற்கு இல்லை. ஆனால், அத்தன்மை கற்பனைக்கே உண்டு என்று கூறுவர். இந்த கற்பனையை மூன்று வகையாக கொண்டு இலக்கியத்தில் கையாளப்படுகின்றது. 1. படைப்புக் கற்பனை, 2. இயைபுக் கற்பனை, 3. கருத்து விளக்கக் கற்பனை என்பனவாகும்.

### 1. படைப்புக் கற்பனை

தேவர்கள் தொத்தாக அலர்ந்துள்ள திருத்துழாய் மாலைகளையும் சந்தன தூப தீபங்களையும் கையில் ஏந்திய வகையில் தொழ பாம்பணையின்மீது திருமகளும் பூமாதேவியும் அடிவருடும்

தன்மையினையும் ஏழ், இசை, ஆறு அங்கம், ஐந்து வேள்வி, மூன்று தீ முதலியவற்றைக் கொண்டு எம்பெருமானை வணங்கி நான்கு வேதங்களையும் இரவு பகல் பாராமல்சிந்தனை செய்த அந்தணர்கள் பொருந்தி வாழ்வதற்கு இடமான திருக்கோவல் ஊர் அதனுள் நான் கண்டேன். இதனை,

**"கொழுந்தலரும் மலர்ச் சோலைக் குழாங்கொள் பொய்கைக்**
**கோள்முதலை வாளெயிற்றுக் கொண்டதற்கு எள்கி**
**அழுந்தியமா களிற்றினுக்கு அன்றுயாழி ஏந்தி**
**அந்தரமே வரத்தோன்றி அருள்செய் தானை**
**எழுந்த மலர்க் கருநீலம் இருந்தில் காட்ட**
**இரும்புன்னை முத்தரும்பிச் செம்பொன் காட்ட**
**செழுந்தட் நீர்க் கமலம்தீ விகைபோல் காட்டும்**
**திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நான்"[3]**

என்னும் பாடல் படைப்புக் கற்பனைப் பற்றிக் கூறுவதைக் காணலாம். ஒரு புலவர் தன்னுடைய அனுபவத்தில் கண்ட பண்புகளை எத்தகைய கட்டுப்பாடும் இன்றித் தானே தேர்ந்தெடுத்து அவற்றை ஒன்றாக இணைத்துப் புதிய வடிவில் முழு நிலா போன்று நிறைவான வடிவத்தைக் கொண்டு படைத்துக் காட்டும் திறனே படைப்புக் கற்பனையாக அமைகிறது.

**2. இயைபுக் கற்பனை**

மனத்தில் உறைந்து காணப்படும் உணர்ச்சிகள், தனக்குப் பொருத்தமான மற்றொரு காட்சியாக அமைந்து நினைவிற்கு கொண்டு வருதல். அப்பொழுது ஆழ்ந்த மனத்தில் பதிந்து கிடந்த உணர்ச்சியை இலக்கியக் கலையாக மலரச் செய்கிறது. எனவே, ஒத்த கருத்தியல் வடிவங்களை உடைய பொருள், கருத்து ஆகியவற்றை இயைபுபடுத்திப் புனைந்து கூறப்படுகிறது. எனவே, இதை இயைபுக் கற்பனை என்று கூறுவர்.

சப்பாணி, குழவி இரு கைகளையும் தட்டுதலே சப்பாணி என்னும் பருவமாகும். இங்கு கண்ணன் பிஞ்சுக் கரங்களால் இரு கைகளையும் தட்டுகிறான். இதே திருக்கையில் தான் முன்பு இரணியன் என்னும் தீயவனின் மார்பைப் பிளந்தவை. கைகளுக்கு இயைபு உள்ளது. இதனை,

**"அளந்திட்ட தூணை அவன்தட்ட ஆங்கே**
**வளர்ந்திட்டு வாளுகிர்ச் சிங்க உருவாய்**
**உளந்தொட் டிரணியன் ஒண்மார் வகலம்**
**பிளந்திட்ட கைகளால் சப்பாணி**
**பேய்முலை யுண்டானே! சப்பாணி"[4]**

என்னும் பாடல் புலப்படுத்துவதை அறியலாம்.

இரணியன் கம்பத்தைத் தட்ட, அந்த இடத்திலேயே கூர்மையான நகங்களை உடைய நரசிங்க பெருமாளாகத் தோன்றி அவன் உள்ளத்தைப் பரிசோதித்துப் பார்த்துப் பிறகு அவனுடைய மார்பைப் பிளந்த கைகளால் சப்பாணி கொட்டுக. பேண் மகளான பூதனையின் முலையை உண்டவனே! சப்பாணி கொட்டுக என்று பெரியாழ்வார் கண்ணனைச் சிறப்பித்துத் சப்பாணி பருவத்தோடும் இயைபுப் படுத்திக் கூறுவதை அறியமுடிகிறது.

**3. கருத்து விளக்கக் கற்பனை**

ஒரு புலவன் தான் கண்ட காட்சிகளை அப்படியே கூறிய அக்காட்சிகளைக் காணும்போது தன் மனத்தில் பொங்கியெழும் உணர்ச்சிகளை அறிவுக்கினிய சொற்களில் வடித்துக் கூறுவதாகும்.

உலகில் வலியார் எளியாரைப் பார்த்து சிரிப்பர். ஆண்டாள் மாலிருஞ்சோலை மாலிடம் மையல் கொண்டாள். அவன் திறத்து ஈடுபட்டிரங்குகிறாள். அழகர் மலையில் சோலையில் முல்லைகள் வெந்நிறத்துடன் மலர்ந்திருக்கின்றன.

மக்கள் நகைக்கும்போது பல் வெந்நிறமாகத் தெரியும். தன் நிலையினைக் கண்டு கேலியாக நகைப்பது போன்று ஆண்டாளுக்குத் தோன்றுகிறது. இதனை,

**“போர்க்களிறு பொரும் மாலிருஞ் சோலையம் பூம்புறவில்**
**தார்க்கொடி முல்லைகளும் தவளநகை காட்டுகின்ற**
**கார்க்கொள் பிடாக்கள் நின்று கழறிச் சிரிக்கத்தரியேன்**
**ஆர்க்கிடுகோ தோழி! அவன் தார்செய்த பூசலையே”[5]**

என்னும் பாடல் பகர்கின்றது.

போர்க்களிறுகள் பொருது விளையாடுகின்ற திருமாலிருஞ்சோலை எனும் மலையில் தாழ்வரைகளில் அரும்புகளை உடைய கொடிகள் மலர்ந்து பூத்துக் குலுங்குவதைப் பார்த்து காட்சி என்பது புன்னகைச் செய்தான் எப்படி முகம் மலர் சிறப்புது அதை போல இருப்பதைத் தரியேன் தோழி! அவன் தார் செய்த பூமாலை யாரிடத்து முறையிட்டுக் கொள்வது? என்று ஆண்டாள் கூறுவதை அறியமுடிகிறது.

**பொருள்**

பக்தி இயக்கக் காலத்தில் ஆழ்வார்கள் திருமாலின் வழிபாட்டினைத் தூண்டும் வகையில் தோத்திரப் பாடல்களைப் பாடினர் என்பது குறிப்பிடத்தக்கது. இறைவனையே பாடலுக்குரியக் கருப்பொருளாகக் கொண்டவர்கள் ஆழ்வார்கள் ஆவர்.

முக்கரணங்களாலும் கைங்கர்யம் ஆவர். அவன் பெருமைக்கு ஏற்ற பாசுரங்கள் பாடும்படியான புண்ணியத்தைப் பெற்றேன் என்கிறார். எம்பெருமானே! எல்லாப் பிறப்புகளிலும் எல்லா நிலைகளிலும் தவம் செய்தவன் நானே. அந்தத் தவத்தின் பயனைப் பெற்றவனும் நானே. உயர்ந்த தமிழ் மொழியின் ஆனாகிய அழகிய சொல் மாலைகளை உன்னுடைய திருவடிகளுக்கே சமர்ப்பிக்கின்றேன். அதன் வழியாக பெரிய தமிழ்க் கலைகளில் வல்லவனாய் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகவும் இருப்பவனும் அடியேனே!

பகவத் விஷயத்தில் ஈடுபாடில்லாத தமிழனாயிராமல் பகவத் விஷயத்தில் பெரிதும் ஊன்றி இருக்கும் பெருந்தமிழனாய் இருப்பேன் என்றார். இருந்தமிழ் நன்மாலை சொன்னேன் கற்பதற்கு, சிலரே ஓதக்கூடிய வடமொழியில் இல்லாமல் அனைவரும் ஓதும்படியாக இலக்கிய இலக்கண வளம் நிறைந்த உயர்ந்த தமிழில் சொல் மாலை ஓதினோர் என்கிறார் பூதத்தாழ்வார். இதனை,

**“யானே தவம்செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்**
**யானே தவமுடையேன் எம்பெருமான் யானே**
**இருந்தமிழ்நல் மாலை இணையடிக்கே சொன்னேன்**
**பெருந்தமிழன் நல்லேன் பெரிது”[6]**

என்னும் பாடல் எடுத்து இயம்புகிறது.

என்னுடைய வாயால் மானிடர்களைப் பாட நான் தோன்றவில்லை. பெரும் சிறப்புக்குரிய வள்ளலும், சக்கராயுதத்தையுடையவருமான திருமாலை எனக்காகவே உள்ளவர். அப்பரமனை இம்மையில் ஏத்தி வணங்கிப் போற்றும் பேறு பெற்றவனானேன். அவர் வானவர் நாட்டினையும் கண்டு அனுபவம் பெற்ற முக்தியுலகத்தையும் எனக்கு அருளும் தன்மையில் நின்றருளினவர். இதனை,

**"வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவி யேனல் லேன்**
**ஆய் கொண்ட சீர்வள்ளல் ஆழிப் பிரான் எனக் கேயுன்**
**சாய்கொண்ட இம்மையும் சாதித்து வானவர் நாட்டையும்**
**நீகண்டு கொள்ளென்று வீடும் தரும் நின்று நின்றே"**[7]

என்னும் நம்மாழ்வார் பாடல் வலியுறுத்துவதை அறியலாம்.

எனவே, பூதத்தாழ்வார், நம்மாழ்வார் ஆகிய இருவரும் கண்ணப் பிரானை முதன்மையாக கொண்டு தமிழும் இயற்கை வளத்தையும் கொண்டு பாடப்படுவதை ஆழ்வார் நோக்கமாக காணப்படுவதைப் பாடல் வழியாக அறிந்துகொள்ள முடிகிறது. இயற்கைப் பொருளையும் தமிழைப் பாடும் பொருளாக கொண்டு புனைந்துள்ளது தெளிவாக புலனாகிறது.

**வடிவம்**

சங்கப் பாடல்கள் என்பது கற்றவர்க்கு மட்டுமே புரிந்துகொள்ளும் வகையில் உள்ளன. ஆழ்வார்களின் பாடல்கள் என்பது கற்றவரும், மற்றவரும் கூடிப் பாடும் நிலைக்கு ஏற்ப எளியனவாய் அமைந்துள்ளது. மேலும், மக்கள் இணைந்து பாடும் வகையில் ஏற்ற இசைப் பாடல்களாய் அமைந்த வண்ணமாகவும் காணப்படுகின்றன. இவ்வாறு நடையில் எளிமையும் இசை இனிமையும் ஒருங்கே காணப்படுவதால் தமிழ் இலக்கிய மாறுதல் ஏற்பட்டது. ஆழ்வார் பாசுரங்களுக்குப் பண் தாளங்கள் என்பது மிகவும் இன்றியமையாதது ஆகும். ஆகவே, இப்பாக்கள் நடையில் நெகிழ்ந்து வளரவும் மக்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ளவும் வழிவகுக்கும். மேலும், சந்தர்ப்பத்திற்கேற்ப சந்தம் மாறி பொருளை விளங்கச் செய்தன. இதனை,

**"பஞ்சவர் தூதனாய்ப் பாரதம் கைசெய்து**
**நஞ்சுமிழ் நாகம் கிடந்தநற் பொய்கைபுக்கு**
**அஞ்சப் பணத்தின் மேல் பாய்ந்திட்டு அருள் செய்த**
**அஞ்சன வண்ணனைப் பாடிப்பற**
**அசோதைதன் சிங்கத்தைப் பாடிப்பற!"**[8]

என்னும் பெரியாழ்வார் திருமொழி கூறுவதைக் காணலாம்.

பாண்டவர்களுக்காகத் துரியோதனாதியரிடம் தூதனாய்ச் சென்று அவர்கள் ஒத்துவராமையால் பாரதப் போரை அணிவகுத்துச் செய்தவனும் காளியன் கிடந்த கொடிய மடுவில் புகுந்து அவன் அச்சம் கொள்ளும் வகையில் அவனது படத்தின் மேல் குதித்து, அப்பாம்பின் உயிரைக் கருணையால் பிழைக்கச் செய்தவனுமாகிய அஞ்சனவண்ணனைப் பாடிப்பற! அசோதை தன் சிங்கத்தைப் பாடிப்பற! என்று நம்மாழ்வார் கண்ணப்பிரானைப் புகழ்ந்து பாடியுள்ளார் என்பது அறிந்துகொள்ள முடிகிறது. இறைவனின் வண்ணத்தையும் பாம்பின் வண்ணத்தையும் இணைந்து வடிவம் கொடுத்துப் புனைந்துளளார் நம்மாழ்வார் என்பது தெளிவு.

**உவமைகள்**

பொருள் விளக்கத்திற்கு உவமைகள் மிகவும் முதன்மையாகத் திகழ்கிறது. ஆழ்வார்கள் படைத்துள்ள உவமைகள் பெரும்பாலும் இயற்கையை அணுகி நுணுகி அறிந்த பான்மையைப் புலப்படுத்துவதாகவே அமைந்துள்ளன.

அபிமன்யுவினுடைய மகனான பரீட்சித்தை மறுபடியும் பிழைப்பித்துப் பாண்டவர்களுடைய சாரீரம் பாரத யுத்தமாகிற அச்சம் தரும் பேரிடியில் விழுந்து அழிந்து போகாதபடி குரு முகமாய்க் கீதாஉபதேசங்களைச் செய்து காப்பாற்றிய கண்ணபிரானுடைய திருப்பதி செங்கமலம் திருமுகமாய்க் கருங்குவளை திருநிறமாய்ப் பொருமுகமாய் நின்று சிறப்பிக்கப்படுகிற நீர்வளத்தை உடைய திருவரங்கம் ஆகும். இதனை,

**“மருமகன்தன் சந்ததியை உயிர்மீட்டு மைத்துனன்மார்**
**உருமகத்தே வீழாமே குருமுகமாய்க் காத்தானூர்**
**திருமுகமாய்ச் செங்கமலம் திருநிறமாய்க் கருங்குவளை**
**பொருமுகமாய் நின்றலரும் புனல் அரங்கம் என்பதுவே”[9]**

என்னும் பாடல் புலப்படுத்துவதைக் காணலாம்.

உன்னதமான கருமாணிக்கம் போல திருவண்ணத்தையுடைய ஸ்ரீமந்நாரா யணனைச் செந்தாமரைக் கண்ணன் என்பேனோ? பவளம் போல் சிவந்த வாய் உடையவன் என்று கூறுவேனோ? அழகிய ஒளிக்கதிர்கள் பொருந்திய திருவடியை உடையவன் என்பேனோ? சிவந்த ஒளியை நல்கும் கிரீடத்தையுடையவன் என்றேனோ? திருமகள் விளங்கும் திருமார்பு உடையவன் என்பேனோ? சங்குச் சக்கரமும் ஏந்திய கரத்தை உடையவன் என்பேனோ? என்னவென்று கூறுவேன்? என்று நம்மாழ்வார் கூறுகிறார். இதனை,

**“பங்கயக் கண்ணன் என்கோ? பவளச்செவ் வாயன் என்கோ?**
**அங்கதிர் அடியேன் என்கோ அஞ்சன வண்ணன் என்கோ**
**செங்கதிர் முடியன் என்கோ திருமறு மார்வன் என்கோ**
**சங்குசக் கரத்தன் என்கோ சாதி மாணிக்கத் தையே”[10]**

என்னும் பாடல் உவமையைச் சுட்டுகிறது.

கண்ணபிரான் வெண்ணெயை உண்ட பிரபாவத்தை இப்பாசுரம் கூறுகிறது. வானாகவும் தீயாகவும் அலைகள் வீசுகின்ற கடலாகவும், கற்றாகவும் நாள் பூத வடிவங்களைக்கொண்டு மண்ணை நிர்வகித்து வருபவனும் தேன் போன்றும் பால் போன்றும் இனிமையுடையவனுமாக விளங்கும் திருமாலே! பசுக்கள் மேய்க்கும் ஆயர் குலத்தில் பிறந்த யசோதைப் பிராட்டியினுடைய வெண்ணெய் முன்னொரு நாள் பூமியை உண்டு வெளிப்படுத்தின எம்பெருமானது திருவயிற்றுக்கு நிறையுமோ? இதனை,

**“வயிறழல வாளுருவி வந்தானை அஞ்ச**
**எயிறுறிலக வாய்மடுத்த தென்நீ! பொறியுகிரால்**
**பூவடிவை யீடழித்த பொன்னாழிக் கையா! நின்**
**சேவடிமேல் ஈடழியச் செற்று”[11]**

என்னும் பாடல் பகர்வதை அறியலாம்.

உவமை என்பது பக்தி இலக்கியமாக இருந்தாலும் சரி, மற்ற இலக்கியங்களாக இருந்தாலும் சரி உவமை என்பது இலக்கியத்திற்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாக போற்றப்படுகிறது. அதனால் தான் தொல்காப்பியரும் உவமையியல் என்னுமொரு தனி இயலைப் படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரு இலக்கியம் செம்மையாகவும் சிறப்பாகவும் அமைவதற்கு மேலே கூறப்பட்டுள்ள இலக்கியக் கொள்கைகள் கொண்டு அமைதல் சிறப்பு என்று கருதலாம்.

**முடிவுரை**

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் கற்பனை, பொருள், வடிவம், உணர்ச்சி, உவமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளதை ஆழ்வார்களின் பாசுரத்தில் இருந்து அறிந்துகொள்ள முடிகிறது. உள்ளதை உள்ளவாறு கூறினால் சிறப்பில்லை. எனவே, அச்சிறப்பு இலக்கியத்தில் பெறுவதற்கு கற்பனை, பொருள், வடிவம், உணர்ச்சி, உவமை ஆகிய இலக்கியக் கொள்கைகளைக் கொண்டு புனைந்தால் மட்டுமே சிறப்பாக அமையும் என்பதை ஆழ்வார்கள் அருளிய பாசுரத்தில் இருந்து அறிந்துகொள்ள முடிகின்றது.

## குறிப்புகள்

1. த.வசந்தாள், ஆழ்வார்கள் ஒலிசெய் தமிழ்மாலை, ப.37.
2. ம.பெ.சீனிவாசன், வைணவ இலக்கிய வகைகள், ப.47.
3. திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி, இரண்டாம் பத்து, பா.1140.
4. பெரியாழ்வார் திருமொழி, சப்பாணிப் பருவம், பா.83.
5. ஆண்டாள், நாச்சியார் திருமொழி, பா.588.
6. பூதத்தாழ்வார், இரண்டாம் திருவந்தாதி, பா.3357.
7. பெரியாழ்வார், எட்டாம் திருவாய்மொழி, பா.2400.
8. மேலது. திருமொழி, பா.311.
9. மேலது. பா. 404.
10. திருவாய்மொழி, மூன்றாம் பத்து, பா.2339.
11. பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதி, பா.3276.

## துணைநூற் பட்டியல்

1. கி. வேங்கடசாமி செட்டியார், (ப.ஆ.) நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திருவேங்கடத்தான் திருமன்றம், சென்னை, 1973.
2. ம.பெ. சீனிவாசன், வைணவ இலக்கிய வகைகள், தேவகி பதிப்பகம், சிவகங்கை, 1994.
3. த. வசந்தாள், ஆழ்வார்கள் ஒலிசெய் தமிழ்மாலை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.